JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**S.T.C. 384/2018**

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **17.02.2026.**

**P.W. 1 Name:** சாந்தகுமார் **S/o.** சின்னப்பன்

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் பு.சா. 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

1. 24.11.2017 ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, சிப்காட் பெருந்துறை கிளையின் என் மனைவி பெயரில் ஆவண வைப்பீடு செய்யப்பட்டதற்கான பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகல், **பு.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 01.04.2017 முதல் 31.03.2018 ம் தேதி வரையிலான என்னுடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளையின் ஸ்டேட்மென்ட், வங்கி மூலமாக இணையதள வழி எடுக்கப்பட்டது, **பு.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பு.சா.ஆ.7 வங்கி கணக்கு என்னுடைய தனிப்பட்ட கணக்கு இல்லை என்றால் சரிதான் எனக்கும் என் மனைவிக்கும் கூட்டாக துவங்கப்பட்ட கணக்கு ஆகும். என் மனைவி பெயரில் ஸ்டேட் பாங்க ஆப் இந்தியா வங்கியில் கடன் பெற்றிருந்தேன் அதற்காக துவங்கப்பட்ட கணக்கு என்றால் சரிதான். பு.சா.ஆ.7 ல் 28.11.2017 ம் தேதி ரூ. 16 லட்சம் வரவு வைக்கப்பட்டருந்தது என்றால் சரிதான். 16 லட்சம் தொகை வீட்டிற்காக ஏற்கனவே வாங்கப்பட்ட கடனை வீட்டினை விரிவாக்கம் செய்வதற்காக

டாப் அப் செய்யப்பட்ட தொகை என்றால் சரிதான். வங்கியில் பெற்ற கடனை எவ்வாறு வீடு கட்டுவதற்கு செலவளித்தேன் என்று வங்கியில் நான் கணக்கு ஒப்படைத்திருப்பேன் என்றால் சரிதான்.

2. வங்கியில் வாங்கப்பட்ட மொத்த கடன் தொகை எவ்வளவு என்றால் 29 லட்சம் ஆகும். கடைசியாக வங்கியில் பெற்ற 16 லட்சம் ரூபாய் தொகையில் வீட்டை விரிவாக்கம் செய்து அதற்கான ரசீதுகளை வங்கியில் ஒப்படைத்துள்ளேனா என்றால் வீட்டை விரிவாக்கம் செய்யவில்லை அந்த தொகையை தான் எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி தொகையை தான் எதிரிக்கு கொடுத்தேன் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். காசோலை மட்டும் கொடுத்தார். 29.11.2017 மற்றும் 30.11.2017 ம் தேதிகளில் இரண்டு தொகைகள் யார் காசோலையில் கையெழுத்திட்டு பணம் பெற்றது என்றால் நான் தான் கையெழுத்திட்டு பணம் பெற்றேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை என்னுடைய வருமான வரிக் கணக்கில் ரூ. 16 லட்சத்தை காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

3. வங்கியில் இருந்த பெற்ற தொகையை எதிரிக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் மேற்படி தொகையை என்னுடைய வீட்டின் விரிவாக்கத்திற்கு பயன்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. 02.12.2017 ம் தேதி எதிரி கடன் பெற்றதாகவும் அதற்காக 02.04.2018 ம் தேதி காசோலை கொடுத்தாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை